**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.C.C.No. 73/2025**

**Deposition of Witness for Petitioner PW2(LW2)**

| | | |
|---|---|---|
| **Name** | : | **தனக்குமார்** |
| **Father's Name** | : | **ஆறுமுகம்** |
| **Village** | : | **சத்தியமங்கலம்** |
| **Taluk** | : | **ஈரோடு** |
| **Calling** | : | **தனியார் நிறுவனம்** |
| **Age** | : | **23** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**12.02.2026** **Witness Signature :**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 03.44 P.M (சாட்சியை கோத்தகிரி தலைமைக் காவலர் எண் 158 திரு. எம். மனோகரன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 13ம் தேதி மாதம் தெரியவில்லை, 2025ம் வருடம், நானும், எனது மாமா மகன் சிவக்குமாரும் Pulser இருசக்கர வாகனத்தில், அவர் ஓட்ட, நான் பின்னால் அமர்ந்துகொண்டு மற்றொரு Splendor Plus இருசக்கர வாகனத்தில் எனது நண்பர் ஆஜர் எதிரி இளங்கோவன் ஓட்ட, அவருக்கு பின்னால் எனது நண்பர் அருண்குமார் அமர்ந்துகொண்டு, கோத்தகிரியிலிருந்து ஊட்டி

செல்வதற்காக கட்டபெட்டு வழியாக சென்று கொண்டிருந்தபோது, எங்களுக்கு முன்னால் இளங்கோவன், அருண்குமார் சென்றுகொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களுக்கு பின்னால் சென்று கொண்டிருந்தபோது, ஒரு வளைவில் கோவில் அருகே திரும்பும்போது, எதிரிக்கு பின்னால் அமர்ந்திருந்த அருண்குமார் ெ ஹல்மெட்டை கையில் வைத்திருந்ததாலும், எதையும் பிடிக்காமல் அமர்ந்திருந்ததால், கீழே விழுந்து அருண் குமாருக்கு பின் தலையில் அடிப்பட்டுவிட்டது.

2. பின்பு அருகில் இருந்த உதவியுடன் காயம்பட்ட அருண்குமாரை கோத்தகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்து, முதலுதவி சிகிச்சை செய்துவிட்டு, அருண் குமார் சுயநினைவின்றி இருந்ததால் மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். விபத்துக் குறித்து அருண் குமாரின் அப்பா புகார் கொடுத்திருந்தார். ஒரு வாரம் கோவை அரசு மருத்துவமனையில் இருந்த அருண்குமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை 13ம் தேதி மாலை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு அனுமதியின்பேரில் குறுக்கு விசாரணை:**

1. போலிஸ் விசாரணையில் ஆஜர் எதிரி TN 36 V 6418 என்ற பதிவெண் கொண்ட Splendor Plus பைக்கில், விபத்தில் இறந்த அருண் குமாரை அமர்த்திக்கொண்டு காலை 11.50 மணிக்கு, விபத்து நடந்த இடத்தில், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று வளைவில் வளைக்க முடியாமல், Skit ஆகி விபத்தை

ஏற்படுத்தினார் என்றும், விபத்தில் அருண்குமாருக்கு, இடதுபக்க தலையில் பலத்த உள்காயம் ஏற்பட்டது என்றும், கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, நான் அவ்வாறு சொல்லவில்லை. அந்த விபத்தில், எதிரிக்கும் வாகனத்திற்கும் என்ன ஆனது என்றால், இளங்கோவிற்கு இடதுபக்க கையில் லேசாக அடிபட்டிருந்தது. பைக்கிற்கு எந்த அடியும் இல்லை. ஆஜர் எதிரி எனக்கு நண்பர் என்பதால், அவருக்கு ஆதரவாக, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இருசக்கர வாகனத்திற்கு, இடதுபக்க முன் பம்ப்பரிலும், இடது பின் Footrest லும் சேதமடைந்துள்ளது என்றால் அவ்வாறு சேதம் எதுவும் ஏற்படவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**S/d/- G. Amirdham.,12.02.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**